
## திராவிடத்தால் வாழ்கிறோம்

857

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

66

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# சுயமரியாதைச் சிந்தையில் ஊறியது, தமிழ்நாடு!

‘குடிஅரசு’ இதழின் மூலம் பெரியார் உருவாக்கிய பார்ப்பனரல்லாதோருக்கான சமூகநீதிச் சிந்தனைப்போக்கு ‘சுயமரியாதை இயக்கம்’ - ‘நீதிக்கட்சி’ என்ற அளவில் சுருங்கிவிடாமல், ஒட்டுமொத்த தென்னிந்தியாவின் ஒருமித்தப் பார்வையாகவே வெகு விரைவில் மாறியது. அந்த உணர்வைப் பிரதிபலித்த மாநாடுகளில் ஒன்று, 1927-ஆம் ஆண்டு மே 7, 8 ஆகிய தேதிகளில், மாயவரத்தில் நடைபெற்ற தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதோர் 6-வது மாநாடு.

150 அடி நீளமும், 75 அடி அகலமும் கொண்ட பந்தலில் மாநாடு கூட்டப்பட்டது. சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் மாநாட்டுப் பந்தலில் வாசகங்களாக எழுதப் பட்டிருந்தன. தெருக்களில் தோரணங்களும், வளைவுகளும் அழகுற அமைக்கப்பட்டிருந்தன. காலை 10.30 மணிக்கு ரயிலடியில் தொடங்கிய ஊர்வலம், ஒரு மைல் தொலைவுள்ள மாநாட்டுப் பந்தலை வந்தடைய நண்பகல் ஒரு மணி ஆனது. பார்ப்பனர்கள் மட்டுமே சமைத்து, ஜாதிக்கு ஒரு பந்தி வைக்கும் காலம் அது. ஆனால், பார்ப்பனரல்லாதோரைக் கொண்டு சமையல் பணிகள் நடைபெற்றன. சமபந்தி போட்டு அனைவரும் ஒன்றாக சாப்பிட்டனர்.




பிற்பகல் 2.30 மணிக்கு முதல் நாள் மாநாடு தொடங்கியது. மாநாட்டுத் தலைவராக கிருஷ்ண நாயர் நியமிக்கப்பட்டார். திருவாங்கூர் உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், திருவாங்கூர் சமஸ்தான திவானாகவும் இருந்தவர் கிருஷ்ண நாயர். அதற்கு முந்தைய திவான்களில் முதல் பார்ப்பனரல்லாதோர் இவர்தான். அதனாலேயே மாநாட்டுக்குத் தலைவராக கிருஷ்ண நாயரைப் பரிந்துரைத்தார் பெரியார். மாநாட்டுப் பந்தலுக்குள் நான்காயிரம் பேரும், வெளியே ஆயிரம் பேரும் என ஐந்தாயிரம் பேர் கூடியிருந்தனர்.

மறுநாள் மதியம் அதே மாநாட்டுத் திடலில் ‘சன்மார்க்க மாநாடு’ கூடியது. பொறையார் நகர்மன்றத் தலைவர் ராஜதுரை செட்டியார் சன்மார்க்க மாநாட்டில் பேசும் போது, வேதம்- சாஸ்திரங்கள் போன்றவை, பார்ப்பனர்கள் தங்கள் சுயநலத்துக்கும் மேலாதிக்கத்துக்கும் செய்துகொண்ட ஏற்பாடுகள் என ஆதாரங்களுடன் விளக்கினார். மேலும், “பார்ப்பனர்களைக் கொண்டே புரோகிதம் செய்ய வேண்டுமென்பது அறியாமை. பெண்களைச் சிறுமைப் படுத்தும் முறையே பார்ப்பனர்களால்தான் உருவானது. பிறவியில் உயர்வு தாழ்வு கிடையாது. பார்ப்பனர்கள் சன்மார்க்க சங்கத்தில் சேர விரும்பினால், பூணூலை எடுத்துவிட்டு வரட்டும்” என்றும் அவர் பேசிய பேச்சு, சுயமரியாதை இயக்கத்தின் சிந்தனையில் தமிழ்நாடு ஊறிக்கிடந்தது என்பதை உணர்த்தியது.

சாதிப் பாகுபாட்டை பார்ப்பனரல்லோதோர் கைவிடல் வேண்டும், பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்துடன் மாகாண சுயாட்சி வழங்கப்பட வேண்டும், எல்லா உத்தியோகங்களிலும் பார்ப்பனர்களே இருப்பதால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு பார்ப்பனரல்லாதோரை மட்டும் நியமிக்க வேண்டும், தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும், ‘ஜஸ்டிஸ்’ - ‘குடிஅரசு’ - ‘திராவிடன்’ - ‘சமதர்சனி’ இதழ்களை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என மொத்தம் 14 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

சன்மார்க்க மாநாடு, இளைஞர் மாநாட்டிலும் தனித்தனியே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாடு குறித்து தனது ‘தமிழ்நாடு’ இதழில் கடுமையான விமர்சனங்களை வைத்தார் வரதராஜுலு நாயுடு. அதற்கு ‘குடிஅரசு’ இதழில் ஆக்கப்பூர்வ பதில்களைத் தந்தார் பெரியார். அந்த அணுகுமுறையும், அறிவு முதிர்ச்சியும் வரதராஜுலு நாயுடுவையும் பெரியார் பக்கம் சாய்த்தது!.

...கூட்டம் திரளும்

## விடுதலையும் நானும் `ஆசிரியரின்' நெகிழ்ச்சி!

91-ஆம் ஆண்டில் (1.6.2025) அடியெடுத்து வைத்துள்ளது ‘விடுதலை’ நாளிதழ். இது தொடர்பாகத் தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டுள்ள திராவிடர் கழகத் தலைவரும், விடுதலை ஆசிரியருமான கி.வீரமணி அவர்கள்,” என் வாழ்வு முடியும் வரை “விடுதலை’ இலக்கு நோக்கி உழைப்பேன்” என அறிக்கை வெளியிட்டுள்ளார்.

வயதிலும், கொள்கை வளர்ச்சியிலும் ‘விடுதலை’ வயதுடன் நான் போட்டியிடுகிறேனா அல்லது ‘விடுதலை’ என்னுடன் போட்டியிடுகிறதா என்றுதானே கேட்கத் தோன்றுகிறது உங்களுக்கு?

விடை எளிதில் கிடைக்குமா?

‘இரண்டும் இரண்டு கண்கள் போல! இரண்டும் இதயமும், மூளையும் போல!’ என்று கூட நீங்கள் விடை சொல்லும் அளவுக்கு நான் ‘விடுதலை’யுடன் ஒன்றித்து விட்டேன்.

இந்நாள், “அந்தப் பொறுப்புடன் என்னால் முடியும் வரை – என் வாழ்வு முடியும் வரை – என் இறுதி மூச்சு உள்ளவரை ‘விடுதலை’ இலக்கு நோக்கி உழைத்தே வருவேன்”என்று உறுதியைப் புதுப்பிக்கும் நாள் – இந்தச் சமூக விழிப்புணர்வுக்கான விடியல் பிறந்த நாள்! ‘விடுதலை’ தொடர்ந்து வீறுகொண்டு, தெம்புடன், அங்கிங்கெனாதபடி, எங்கெங்கும் ‘விடுதலை’, வீடுதோறும் ‘விடுதலை’, நாளும் அறிவுபெற ‘விடுதலை’ என்ற இலக்கு நோக்கிப் பயணிக்க ஒவ்வொருவரும் ஒத்துழையுங்கள்.

தோழர்களே, ‘விடுதலை’யின் ‘வாலிப’ வாசகர்களே, நூற்றாண்டு தாண்டிய, நமது கொள்கை வெற்றியின் எல்லை உலகளாவியது என்பதால், ‘உலகம் பெரியார் மயம்!

‘பெரியார் உலகமயம்’ என்பதை நிலைநிறுத்த, தந்தை பெரியார் என்ற நம் அறிவு ஆசான் தந்த போராயுதத்தின் வீச்சு, ஊர்தோறும் உலகம் தோறும் சென்றிட, உண்மையை விரும்பும் உன்னதத் தோழர்களே கடமையாற்ற களத்திற்கு வாருங்கள்” என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

‘விடுதலை’ வாழ்ந்தால், எவரே வீழ்வர்?

‘விடுதலை’ வீழ்ந்தால், எவரே வாழ்வர்?’ என்று முழங்கும் ஆசிரியரின் அறிக்கை இளையோரிடம் கவனம் பெறட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



### கைக்குழந்தை கைகளால் கழக வளர்ச்சி நிதி!



க.ராஜராம்

1983-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 59-வது பிறந்தநாள் விழா சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது நான் என் மனைவி சிவகாமி மற்றும் கைக்குழந்தையாக இருந்த என் மகள் ராஜகுமாரி ஆகியோரை அழைத்துக் கொண்டு தலைவரைச் சந்திக்கச் சென்றேன். வாழ்த்துத் தெரிவித்து, என் மகள் கையால் கழக வளர்ச்சி நிதியாக ரூ.20-ஐ வழங்கியபோது எடுத்துக் கொண்ட புகைப்படம்..

– க.ராஜராம்,
அசோக் லே-லண்ட் தொழிற்சங்க மூத்த உறுப்பினர்,
சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


66

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# திராவிடம் தந்த தீர்வுகள்!

இந்திய ஒன்றியத்திலேயே முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், பல முற்போக்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில், முன்னோடி மாநிலமாகவும் இருந்துள்ளது தமிழ்நாடு. இந்த முயற்சிகள் இன்றைக்கும் தொய்வின்றித் தொடர்கின்றன.

வரலாறு நெடுக, பிற்படுத்தப்பட்ட-மிக பிற்படுத்தப்பட்ட-சிறுபான்மையின மக்களுக்காக தமிழ்நாடு மேற்கொண்ட பல்வேறு முற்போக்கு நடவடிக்கைகளையும் அதன் மூலம் அடைந்த இலக்குகளையும் உலகிற்கு அறிவிக்கும் வகையில், ஆங்கிலத்தில் வெளியாகி இருக்கும் தொகுப்புதான் *‘Tamil Nadu: The Land of Social Justice Reservation and Beyond’*. தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இணைந்து இத்தொகுப்பை வெளிக் கொணர்ந்துள்ளனர்.




திராவிடர், பார்ப்பனர் அல்லாதோர், சமூக நீதி போன்ற சொற்களுக்குப் பின் பொதிந்திருந்த பொருளும் அரசியலும் 19-ஆம் நூற்றாண்டு முதல் எப்படி எல்லாம் பரிணமித்து வந்துள்ளது என்பது தொடங்கி, நீதிக்கட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம், அதன் பிறகான இடஒதுக்கீட்டு நடைமுறைகள், சமகாலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் இடஒதுக்கீடு எப்படி உருவானது என்பது வரையிலான வரலாற்றை, அடிக்குறிப்புகளுடன் ஆய்வுப்பூர்வமாகப் பதிவு செய்யும் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை மட்டுமின்றி, இடஒதுக்கீடு குறித்து இதுவரை வெளியாகி இருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த அரசாணைகளும் அறிவிப்புகளும், தமிழ்நாட்டில் செயல்பாட்டில் இருக்கும் சட்டங்கள் பற்றிய குறிப்புகளும் தனி அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளன.

நூலின் இரண்டாம் பகுதி, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, வேளாண்மை, நகரமயமாக்கல் போன்ற துறைகள் சந்தித்து வரும் சமகாலப் பிரச்சனைகள் குறித்தும் பேசுகின்றன. குறிப்பாக, திராவிட இயக்க ஆட்சியில் சாதிய அடுக்குகள்-தொழில்-உற்பத்தி முறை ஆகியவை எப்படி மாற்றம் அடைந்துள்ளன என்பதை, ஒரு கட்டுரை மிக ஆழமாக ஆராய்கிறது. தமிழ்நாட்டில் குறைந்த விலையிலும் விலையில்லாமலும் அரிசி வழங்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டதன் விளைவாக, கிராமபுறப் பகுதிகளில் பண்ணை அடிமை முறை முற்றிலுமாக செயலிழந்து போன வரலாற்றை, ஓர் அத்தியாயம் ஆவணப்படுத்துகிறது. பெண்களை மையப்படுத்தியும், விளிம்பு நிலை மக்களை மேம்படுத்தவும், கிராமப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், அவை மேற்கொள்ளப்பட்டதன் நோக்கத்தை நிறைவு செய்தனவா என்பதை மிக நுணுக்கமாக ஆய்வு செய்கிறது ஒரு கட்டுரை.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சாதிகளற்ற சமத்துவச் சமூகம் காண முன்னெடுத்த ‘பெரியார் நினைவுச் சமத்துவபுரம்’ திட்டம் எப்படி பொதுவெளியில் சமத்துவத்தைச் சாத்தியப்படுத்தியது என்பதை மிக விரிவாக, சமூகப் பின்னணியுடன் ஆய்வு செய்கிறது மற்றொரு கட்டுரை. சமூக மற்றும் பொருளாதாரத் துறையில் கடந்த நான்கு பத்தாண்டுகளில் தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சியையும் மாற்றத்தையும் அதைச் சாத்தியப்படுத்திய திராவிட அரசுகளின் திட்டங்களையும் முன்வைத்து, ஆய்வுப்பூர்வமாக விவரிக்கும் இந்நூல் நம் மீது எறியப்படும் பொய்களையும் புரட்டுகளையும் எதிர்கொள்ள மாபெரும் அறிவாயுதமாகத் திகழும்.

...வாசிப்போம்.

## நம் வரலாறு

### சென்னையில் இந்தி எதிர்ப்பு மாநாடு!

13-10-1963 அன்று சென்னை, நுங்கம்பாக்கத்தில் கழகம் இந்தி எதிர்ப்பு மாநாட்டினை நடத்தியது. அன்று காலை, அறிவகத்தில் இருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. தலைமையுரையாற்றிய பேரறிஞர் அண்ணா, ‘மொழித் திணிப்புக்கு எதிராக, அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைத் தொண்டர்கள் தீயிட்டுக் கொளுத்துவார்கள்’ என்கிற அறப்போர்த் திட்டத்தை, இந்த மாநாட்டில் அறிவித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131